# கிணத்துக்கடவு வட்டாட்சியர் அலுவலகம்

கோயம்புத்தூர் மாவட்டம்

ந.க.எண்.3918/2022/அ/1

## வேலை வாய்ப்பு அறிவிக்கை

நாள்:08.10.2022

கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலகு, கிணத்துக்கடவு வட்டத்தில்,கீழ்க்கண்ட கிராமத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன, மெட்டுபாவி, சிறுக்களந்தை மற்றும் தேவராயபுரம் கிராமங்களில் உள்ள கிராம நிர்வாக அலுவலகத்தில் தலா 1 கிராம உதவியாளர் பணியிடம் காலியாகவுள்ளது. மேற்படி 3 பணியிடத்ததிற்கு கீழ்க்குறிப்பிட்டுள்ள இன சுழற்சி அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| காலி பணியிடம் உள்ள கிராமத்தின் விபரம் | இனசுழற்சி |
|---|---|
| மெட்டுபாவி சிறுக்களந்தை மற்றும் தேவராயபுரம் | 12. ஆதிதிராவிடர் (SC-W-NP-DW) - 1 பணியிடம் (பெண்/முன்னுரிமை அற்றவர் / ஆதரவற்ற விதவை)<br>13. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (MBC/DNC-G-NP) - 1 பணியிடம் (பொது / முன்னுரிமை அற்றவர்)<br>14. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC-G-NP) - 1 பணியிடம் (பொது/ முஸ்லீம் அல்லாதோர் / முன்னுரிமை அற்றவர்) |

| | |
|---|---|
| கல்வித்தகுதி | குறைந்தபட்சம் 5-ம் வகுப்பு தேர்ச்சியும் தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| வயது வரம்பு | ஆதிதிராவிடர் , மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் - 21 வயது முதல் 37 வயது வரை |
| இதர தகுதி | மிதிவண்டி (சைக்கிள்) ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும். |

சம்பந்தப்பட்ட கிராமத்தைச் சார்ந்த விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் தங்களை பற்றிய சுய குறிப்புகளுடன் கல்வித் தகுதி, வகுப்பு (Community Certificate) மற்றும் இதர சான்றிதழ்களுக்கான ஆதாரங்களுடன் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாள் முதல் எதிர்வரும் 07.11.2022 அன்று மாலை 5.45 மணிக்குள் விண்ணப்பிக்கத் தெரிவிக்கப்படுகிறது. உரிய தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கான எழுத்து மற்றும் வாசித்தல் திறனறிவு தேர்வு 30.11.2022 அன்றும் நேர்முகத் தேர்வு 15.12.2022 மற்றும் 16.12.2022 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**வட்டாட்சியர்**
**கிணத்துக்கடவு**

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், கிணத்துக்கடவு.

வெ.ஆ.எண்.646/2022/செ.ம.தொ.அ/கோவை

" சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம் "